# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:93** **தேதி:-20.01.2016**

## தமிழக BSNLன் வளர்ச்சியை உறுதி செய்த கருத்தரங்கம்

அன்பார்ந்த தோழர்களே,

BSNLன் சேவைகளை நாடு முழுவதும் மக்களுக்கு சிறப்பாக வழங்கிட வேண்டும் என்ற நோக்கோடு நமது அகில இந்திய FORUM 01.01.2016 முதல் ”புன்னகையுடன் கூடிய சேவை” என்ற பெயரில் 100 நாள் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. அந்த சேவையை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்திட வேண்டும் என்ற நோக்கோடு தமிழக FORUM சார்பாக ஒரு சிறப்பு கருத்தரங்கம் பாண்டிச்சேரியில் 19.01.2016 அன்று நடைபெற்றது. குமரி முதல் சென்னை வரை உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் 800க்கும் மேற்பட்ட தோழர்கள் பாண்டிச்சேரி கம்பன் கலையரங்கில் குவிந்தனர்.

மிக உற்சாகத்துடனும், எழுச்சியுடனும் நடைபெற்ற இந்த கருத்தரங்கினை தமிழக FORUMத்தின் தலைவர் தோழர் R.பட்டாபி ராமன் தலைமையேற்று நடத்தினார். வந்திருந்த அனைவரையும் பாண்டிச்சேரி மாவட்ட NFTE தலைவர்களுள் ஒருவரான தோழர் P.காமராஜ் வரவேற்றார். FORUMத்தில் உள்ள சங்கங்களின் தமிழ் மாநில செயலாளர்கள் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் BSNLEU, தோழர் P.சென்னகேசவன் NFTE, தோழர் R.ராஜசேகர் SNEA, தோழர் S.சிவகுமார் AIBSNLEA மற்றும் தோழர் M.S.ராதாகிருஷ்ணன் AIBSNLOA ஆகியோர் தமிழகத்தில் நாம் செய்ய வேண்டிய பணிகளின் அவசியத்தை ஒரு சில வார்த்தைகளில் எடுத்துரைத்தனர். பின்னர் தோழர் R.பட்டாபிராமன் தலைமையுரை ஆற்றிய பின் தமிழக FORUMத்தின் கன்வீனர் தோழர் S.செல்லப்பா புன்னகையுடன் கூடிய சேவையின் அவசியம் பற்றியும் அதனை எவ்வாறு தமிழகத்தில் கொண்டு செல்ல வேண்டும் என அறிமுகவுரை ஆற்றினார்.

அகில இந்திய FORUMத்தின் அமைப்பாளரும் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளருமான அருமைத் தோழர் P.அபிமன்யு அரசின் கொள்கைகளை இடித்துரைத்ததுடன் அதனையும் மீறி நாம் நமது உயிரினும் மேலான BSNLன் சேவைகளை மென்மேலும் விஸ்தரிக்க நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எடுத்துரைத்தார். அவர் தனது உரையில் சென்னை பெருவெள்ளத்தின் போது நமது BSNL ஊழியர் தேங்கி நின்ற நீரில் நீச்சல் அடித்துக் கொண்டு சென்று சென்னை விமான நிலையத்தின் LEASED LINE CIRCUITஐ சரி செய்து கொடுத்ததையும், அதனை சென்னை விமான நிலைய அதிகாரி நமது BSNL CMDயிடம் பாராட்டியதையும் சுட்டிக்காட்டினார். அதன் பின்னர் அகில இந்திய FORUMத்தின் தலைவரும் NFTE சங்கத்தின் பொது செயலாளருமான தோழர் C.சந்தேஸ்வர் சிங், SNEA சங்கத்தின் பொது செயலாலர் தோழர் K.செபாஸ்டின், தோழர் P.வேணுகோபால் தலைவர் AIBSNLEA CHQ மற்றும் தோழர் K.ராஜசேகரன் தலைவர் AIBSNLOA CHQ ஆகியோர் 100 நாள் திட்டத்தின் அவசியம் பற்றியும், அதனை நாம் சிறப்பாக நிறைவேற்ற செய்ய வேண்டிய பணிகள் தொடர்பாகவும் சிறப்பாக எடுத்துரைத்தனர். இந்தியாவில் முதன் முறையாக நடைபெற்ற இந்த கருத்தரங்கினை அனைத்து தலைவர்களும் பாராட்டி பேசினர். அவர்களின் நோக்கத்தை தமிழகம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தினர்.

இந்த கருத்தரங்கில் நிர்வாகத்தின் சார்பில் கலந்துக் கொண்டவர்கள் மிகச்சிறப்பான தயாரிப்போடும், தமிழகத்தின் நாம் எந்த திசை வழியில் செயல்பட வேண்டும் என்றும் சுவையோடும், விவரங்களுடனும் பேசியது சிறப்பம்சம். அது தமிழக BSNLஐ உயர்த்திட ஊழியர்களின் பங்கு அவசியம் என்பதை வலியுறுத்தினர். நாளைய சரித்திரம் தமிழக BSNLன் வெற்றியை சொல்லும் வகையில் இந்த கருத்தரங்கம் உள்ளது என கவித்துவத்துடன் தமிழக BSNLன் தலைமை பொதுமேலாளர் திருமதி N.பூங்குழலி ITS அவர்கள் அறிவித்தவுடன் அரங்கம் முழுவதும் எழுந்த கரகோஷம் அவர்களின் எண்ணத்தை நாம் கண்டிப்பாக நிறைவேற்றுவோம் என்பதை தெரிவித்தது. அவருடன் இணைந்து முதன்மை பொது மேலாளர் (நிதி) திரு G.ரவி, திரு P.சந்தோஷம் ITS Sr.GM(NWP-CM) மற்றும் திரு P.V.கருணாநிதி ITS GM(NWP-CFA) ஆகியோர் இந்தக் கருத்தரங்கத்தில் கலந்துக் கொண்ட ஊழியர்களையும் அதிகாரிகளையும் உற்சாகப்படுத்தி உரையாற்றியது சிறப்பாக இருந்தது. பாண்டிச்சேரி பொது மேலாளர் திருமதி லீலாசங்கரி ITS அவர்கள் தலமட்டத்தில் சந்திக்கும் பிரச்சனைகளையும் அதனை நாம் எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் உரையாற்றினார். மொத்தத்தில் நிர்வாகத்தின் சார்பில் கலந்துக் கொண்ட அனைவரும் இந்த கருத்தரங்கின் நோக்கத்தை உணர்ந்து சம்பிரதாயமாக இல்லாமல் சிரத்தையுடன் பேசியதை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் மனமார பாராட்டுகிறது.

தமிழகத்தில் ”புன்னகையுடன் கூடிய சேவை” திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்ற ஊழியர்களின் உறுதியினை தெரிவித்து இந்த கருத்தரங்கில் பங்கேற்ற அனைவருக்கும் பாண்டிச்சேரி மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் A.சுப்ரமணியன் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

இந்தக் கருத்தரங்கம் வெற்றிகரமாக நடைபெற பல்வேறு சிரமங்களுக்கு இடையே வந்திருந்து சிறப்புரையாற்றிய அனைத்து சங்கங்களின் அகில இந்திய தலைவர்களுக்கும், நிர்வாகத்தின் சார்பில் கலந்துக் கொண்டதமிழக தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அனைத்திற்கும் மேலாக ஒரு குறுகிய கால இடைவெளியில் விடப்பட்ட அறைகூவலை ஏற்று தமிழகம் முழுவதும் இருந்து BSNLன் வளர்ச்சியின் மீது அக்கறையுடன் கலந்துக் கொண்ட அனைத்து ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் வணக்கத்துடன் வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது. 15 நாட்களுக்கும் குறைவான அவகாசத்தில் வந்திருந்த அனைவரையும் வரவேற்று உபசரித்து, நல்லதொரு அரங்கத்தில் BSNLன் வளர்ச்சி பற்றிய கருத்துக்களை கேட்பதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என கடுமையாக உழைத்த பாண்டிச்சேரி மாவட்ட அனைத்து சங்க நிர்வாகிகளையும் தோழர்களையும் தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் நன்றியுடன் பாராட்டுகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**